## 2

# தேவ ஞானம் தேவைப்பட்ட சபை

## (1 கொரிந்தியர் 1:18-2:16)

கொரிந்து சபைக்கு ஞானம் முக்கியத்துவம் வாய்ந்ததாயிருந்தது; அதின் அங்கத்தினர்கள், கிரேக்கர்களைப் போலவே,[1] ஞானத்தை உயர்வாக மதித்தனர். கிரேக்க நாட்டில் "தத்துவம்" என்பது - "ஞானத்தை நேசித்தல்" எனும் பொருள் கொண்டது - அதன் மூலப்பதம் ஒரு ஒழுக்கம் என்பதாகக் கருதப்பட்டது. கொரிந்தியர்கள் ஞானத்துக்கு கொடுத்த மதிப்பு 1 கொரிந்தியர்கள் 1:18-2:16ல், பிரதிபலிக்கிறது, இங்கே "ஞானம்" "ஞானி" போன்ற பதங்கள் 30 வசனங்களில் இருபது முறையும்,[2] "பைத்தியம்" எனும் "ஞானத்துக்கு" எதிரான பதம் ஆறு முறையும் (ஆங்கிலத்தில்) காணப்படுகிறது. பவுல் கொரிந்தியர்களின் இருதயத்துக்கு அடுத்தவைகளை பேசுகிறார். கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார் என்பதை அவர் அறிந்திருந்தார் (1:22ஆ). இன்றைய ஜனங்களும் ஏறத்தாழ கிரேக்கர்களைப் போலத்தான் இருக்கின்றனர். நாமும் ஞானத்தைத் தேடுகிறோம்; அல்லது குறைந்த பட்சம் நாம் புத்திமான்களாக சிறந்த கல்விமான்களாக இருக்க விரும்பிகிறோம். யாரும் தன்னை பைத்தியக்காரன் என்றோ மதியீனன் என்றோ எண்ணுவதை விரும்புவதில்லை.

எப்படியாயினும், பவுல் ஞானத்திலே மயங்கவில்லை - குறைந்த பட்சம் கிரேக்கர் தேடிய அந்த ஞானத்தில் அல்லது நம்மிலே அநேகரும் அக்கரை காட்டுகிற அந்த ஞானத்திலே அவர் மயங்கவில்லை. அவர் "உலகத்தின் ஞானத்தைக்" குறித்துப் பேசினார் (1:20ஆ) அதை மற்றுமொரு ஞானத்தோடு முரண்படுத்தி - "இந்த யுகத்தின் ஞானத்தையல்ல" - காட்டுகிறார் (2:6). முதலாவதை மறுத்து இரண்டாவதை பரிந்துரைத்தார்.

இந்த இரண்டு ஞானத்திற்கும் உள்ள வேற்றுமைகளை நாம் கவனிக்கும் பொழுது எப்படிப்பட்ட ஞானி நாம் என்பதையும், எந்த விதமான ஞானத்தை பெற்றிருக்கிறோம் என்பதையும் நமக்குள் கேட்கவேண்டும்.

### உலக ஞானம் (1:18-2:5)

வசனம் 18 கொரிந்து பட்டணத்திலிருந்த பிரிவினையாகிய பிரச்சனைக்கு முதன்மை நிவாரணத்தைக் காட்டுகிறது: இரட்சிப்பு மனித ஞானத்தால் உண்டாகாமல், "பைத்தியமாய்த்" தோன்றுகிற சிலுவையைப் பற்றிய உபதேசத்திலே காணுகிறது! பிறகு பவுல் உலக ஞானத்தைக் குறித்து பரிசீலிக்கிறார் (1:19, 20).

#### உலக ஞானம் பிரிவினைக்கு கொண்டு சொல்லக் கூடும்

ஜனங்கள் உலக ஞானத்தை மதிப்பிடுகின்றனர், ஆனால் பவுலோ அதை மறுத்தார். ஏன்? ஏனெனில் அது கொரிந்து பட்டணத்திலிருந்த சபையை

*பிளவுபடுத்தியது. அதின் அங்கத்தினர்கள் மனுஷர்களைப் பின்பற்றினார்கள் - பவுல், அல்லது அப்பொல்லோ அல்லது பேதுருவை. அவர்கள் பிரசங்கத்தைக் காட்டிலும் பிரசங்கியாருக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். ஒவ்வொருவரும் ஒரு மனிதனை தெரிவு செய்து பின்பற்ற காரணம் அந்தந்த மனிதன் ஞானமிக்கவரைப் போலவும், சிறப்பாக பேசக்கூடியவராகவும் காணப்பட்டிருக்கலாம். அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் பின்வருமாறு வாக்குவாதம் பண்ணியிருக்கலாம்: "எனது அறிவுரையாளர் உன்னுடைவரைக் காட்டிலும் புத்திசாலி"; "எனது பிரசங்கியார் உன்னுடையவரைக் காட்டிலும் சாதுரியான பேச்சாளர்." "உலக ஞானம்" முக்கியமற்றது என்பதை அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும்; உண்மையில், அது சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள ஒரு தடைக்கல்.*

*ஞானத்தை நன்கு அறிந்து கொள்ள பவுல் கொரிந்தியர்களை எப்படி வழிநடத்தினார்? கிரேக்கர் ஞானத்தை மதிப்பிடுவதற்கும், தேவன் ஞானத்தை வெளிப்படுத்துவதற்கு மிடையேயுள்ள வித்தியாசத்தை அவர் முன்னிறுத்தினார். அவர் தமது பிரசங்கம் "வல்லமையான பேச்சிலே" சார்ந்து வரவில்லை என்பதை ஏற்கனவே அவர் சுட்டிக் காட்டினார் (1:17; "சாதுரிய ஞானம்"; NRSV[3]). எனவே ஜனங்கள் தனிப்பட்ட முறையில் அவரைப் பின்பற்றக் கூடாது. பவுல் தொடர்ந்து, சுவிசேஷ அனுபவம் பழைய ஏற்பாட்டின் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்கிறது என்று கூறினார்: "புத்திசாலிகளுடைய புத்தியை" அவமாக்குவேன் என்று தேவன் சொன்னார் (1:19).[4]*

### *சிலுவையைப் பற்றிய உபதேசத்தால் உலக ஞானத்தை தேவன் அழித்தார்*

*வசனம் 19ல் குறிப்பிடுகிறபடி, "ஞானிகளுடைய ஞானத்தை தேவன் எப்படி" அழிக்கிறார்? பிரசிங்கிக்கப்பட்ட செய்தியின் பைத்தியக்காரத் தன்மையினாலே, பாவிகளை இரட்சிப்பதின் மூலம் "ஞானிகளின் ஞானத்தை" தேவன் அழிக்கிறார் என்று 1:21-25ல் பவுல் விளக்குகிறார் (1:21; "பைத்தியமாய் தோன்றும் பிரசங்கத்தினால்"; KJV) வசனம் 21ல் பிரசங்கத்தின் உட்கருத்து செயலை மட்டும் குறிப்பிடாமல் - பிரசங்கிக்கப்பட்ட செய்தி - வலியுறுத்தப்படுகிறது.*

*அதன் உட்கருத்து முதல் நூற்றாண்டில் கேட்டவர்களுக்கு பைத்தியமாகத் தோன்றியது போலவே, இன்றும் பரியாசக்காரர்களுக்கு அது பைத்தியமாகவே காணப்படுகிறது. "சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது" என்று பவுல் சொன்னார் (1:18; எனது வலியுறுத்தல்). தொடர்ந்து அவர், "யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள்; நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார்" (1:22, 23; வலியுறுத்துதல் என்னுடையது). சிலுவையைப் பற்றிய கருத்தைக் கேட்டு யூதர்கள் இடறினார்கள், ஏனெனில் சிலுவையில் அறையப்பட்ட மேசியாவை அவர்களால் கற்பனை பண்ணமுடியவில்லை. குற்றவாளியாய்த் தீர்க்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவரை மையப்படுத்தி பிரசங்கிப்பதை புறஜாதிகள் பைத்தியமாகக் கருதினர்.*

*யூதர்களுக்கும் கிரேக்கர்களுக்கும் சிலுவையைப் பற்றிய உபதேசம்*

பைத்தியமாய்த் தோன்றினாலும், விசுவாசித்தவர்களுக்கு அது இரட்சிக்கும் செய்தியாக இருந்தது. சுவிசேஷ செய்தி தேவனுடைய மகத்துவத்தை விளக்கப்படுத்துகிறது: ஞானிகளிலேயே முதன்மையானவர்கள் கூட செய்யமுடியாத[5] சாதனையை அவருடைய "பைத்தியமாய்த்"[6] தோன்றுகிற காரியம் செயல்படுத்துகிறது.

**தேவனுடைய ஞானத்தின் விளைவுகள்**

"பைத்தியமாய்த்" தோன்றும் செய்திதான் முக்கியமான விளைவுகளைக் கொண்டிருக்கிறது. சிலுவையைக் குறித்த மனிதர்களின் இந்த யூகம் தான் தன்னுள் யார் இரட்சிக்கப்படுவார்கள் என்பதையும், நமது மேட்டிமைக்கான மூலக் காரணியை அப்புறப்படுத்தி, எப்படிப் பிரசங்கிக்கிறோம், எதை நாம் விசுவாசிக்கிறோம் என்பதையும் தீர்மானிக்கிறது.

> *எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை. வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்து கொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார். உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்துகொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமை பாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார். அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். எழுதியிருக்கிறபடி, "மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மைபாராட்டத்தக்கதாக" அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார் (1:26-31)[7].*

*''பைத்தியமாய்த் தோன்றுகிற'' தேவனுடைய செய்தி இரட்சிக்கப்படுவோருக்கு ஏற்புடையதாக இருந்தது.* இரட்சிப்பு கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் வருகிறது எனும் கருத்து, உலகத்தின் பார்வையில் ஞானியாக, மகான்களாகக் காணப்படுவோரால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

*பைத்தியமாய்த் தோன்றுகிற செய்தி மனித மேட்டிமைக்கான எந்த காரணத்தையும் அப்புறப்படுத்துகிறது.* தேவன் இரட்சிப்பை "பைத்தியமாய்த் தோன்றுகிறவைகள்," "பலவீனமாய்த் தோன்றுபவைகள்," "கீழானவைகள்," "பரிகசிக்கப்பட்டவைகள்," "இல்லாதவைகள்" மூலம் கொடுக்கும்படி தெரிந்து கொள்கிறார்.[8] இந்தக் காரணத்தால், "மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமைபாராட்டக்" கூடாது (1:29). "நான் மிகவும் புத்திசாலி, தேவனை எப்படிப் பிரியப்படுத்த முடியும் என்று என்னால் கண்டுபிடிக்க முடிந்தது" என யாரும் உரிமை கோர முடியாது. தனக்கென *நம்பிக்கைக்குரிய* காரணம் ஏதும் இருப்பின் அது கிறிஸ்துவின் மரணம் மட்டுமே என்று ஒவ்வொருவரும் அறிக்கையிட வேண்டும்: "(தேவனால்) இதை செயல் படுத்துவதன் மூலம் நீங்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கிறீர்கள்," ... அவரே நமக்கு ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமானார் (1:30). நமக்குள் எந்த நல்ல காரியமும்

இருப்பதுபோல் நாம் மேன்மை பாராட்ட முடியாது; அப்படி மேன்மை பாராட்ட வேண்டுமானால் தேவன் நமக்கு செய்திருக்கிறவைகளுக்காகவே மேன்மை பாராட்ட வேண்டும் (1:31).[9]

*அன்றியும், "பைத்தியமாய்த் தோன்றுகிற" செய்தி நாம் எப்படி பிரசங்கிக்க வேண்டும்* என்பதையும் செயலாக்குகிறது (2:1-5). பவுலின் பிரசங்கம் அவரது சாதுரியத்தையோ ஞானத்தையோ சார்ந்திருக்க வில்லை. மாறாக கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் அறையப்பட்டிருந்த செய்தியின்மேலேயே சார்ந்திருந்தது.[10]

அப்போஸ்தலர்களின் பிரசங்கம் சிலுவையின் செய்தியை ஆதாரமாக கொண்டிருப்பதைக் காணும்போது, அவருடைய நம்பிக்கை நமக்கு நல்லுணர்வை ஏற்படுத்துகிறது. அவர் எருசலேமில் யூதமத பிரசித்தி பெற்ற ஆசான் கமாலியேலின் பாதத்தில் கற்றவர் (நடபடிகள் 22:3); அவர் போதகர் ரபீகளுக்கான பயிற்சி பெற்றவர். கூடுதலாக அவர் கிரேக்க புலவர்கள் மற்றும் தத்துவ ஞானிகளோடு நன்கு பழக்கமுடையவராக இருந்ததால், கிரேக்கக் கல்வியும் அவர் கற்றிருக்க வேண்டும் (நடபடிகள் 17:28; தீத்து 1:12). பெஸ்துவும் பவுலை "அதிகம் கற்றவர்" என்று சொல்லுகிறான் (நடபடிகள் 26:24). எனவே பவுல் தனது பிரசங்கத்தை தன்னுடைய கல்வி கற்று சாதித்தவைகளின் அடிப்படையாகக் கொண்டு செய்திருக்கலாம், ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை.

*சிலுவையைப் பற்றிய உபதேசம் உண்மையானது பைத்தியமாய்த் தோன்றுகிற நமது விசுவாசத்தின் அடிப்படைக்கு ஏற்புடையதாயிருக்கிறது.* பவுல் கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் அறையப்பட்டதையும் மட்டுமே பிரசங்கிக்கும்படியாய்த் தீர்மானித்தார், அதினால் கொரிந்தியர்களின் விசுவாசம் "மனிதர்கள் மீது சார்ந்ததாயிராமல் தேவனுடைய பெலனைச் சார்ந்ததாயிருக்கும்" (2:5).

## பரத்திலிருந்து வரும் ஞானம் (2:6-16)

2ம் அதிகாரத்தின் மீதிப் பகுதியை வித்தியாசப்பட்ட வகையான ஞானத்தை, பரத்திலிருந்து வருகிற ஞானத்தைக் குறித்து விளக்கமளிக்கும்படி பவுல் பயன்படுத்தினார் (2:6-16).

இந்த பரத்திற்குரிய ஞானத்தின் தன்மைகள் என்ன?

*முதலாவதாக, அது இப்பிரபஞ்சத்தின் ஞானமுமல்ல, இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானமுமல்ல* (2:6). இப்பிரபஞ்சத்தின் பிரபுக்கள் பரத்திற்குரிய ஞானத்தை அன்றும் மதிப்பிட்டுப் பார்க்கவில்லை, இன்றும் மதிப்பிட்டுப் பார்க்கவில்லை. அது நம்மைக் கவலைப்படுத்தத் தேவையில்லை, ஏனெனில் "அவர்களும் அவர்களின் நம்பிக்கைகளும் கடந்து போகின்றவை."

*இரண்டாவதாக, அது உலகத்தோற்றத்துக்கு முன்னே மறைத்துவைக்கப்பட்டு இரகசியமாக இருந்ததுமான நித்திய ஞானம், ஆனால் இப்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது* (2:7). அது இரகசியமாக இருந்தது, ஆனால் இப்போது, அது குறித்து பேசப்படுவதால், இனியும் அது இரகசியமாக வைக்கப்பட்டிருக்கவில்லை; அது வெளிப்படுத்தப்பட்டு விட்டது (கொலோசெயர் 1:26 ஐக் காண்க).

*மூன்றாவதாக, இந்த ஞானம் இயேசு கிறிஸ்துவின் நாட்களில் அவருடைய எதிரிகளால் புரிந்து கொள்ளப்படவில்லை* (2:8). அவர்கள் இந்த பரலோக ஞானத்தைப் புரிந்துகொண்டிருந்திருப்பார்களானால் "மகிமையின் கர்த்தரை

அவர்கள் சிலுவையில் அறைந்திருக்கமாட்டார்கள்.”

*நான்காவதாக, இந்த ஞானம் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டபடியே, ஆவியினாலே இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது* (2:9-11). பவுல் இங்கே ஏசாயா கூறின தீர்க்கதரிசனத்தை மேற்கோள் காட்டுகிறார்: “தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை” (2:9).[11] இந்தத் தீர்க்கதரிசனத்தை தேவன் தமது பரிசுத்தவான்களுக்கு பரலோகத்திலே ஆயத்தப்படுத்தி வைத்துள்ளவைகளுக்கு ஒப்பிடாமல், கிறிஸ்துவுக்குள் வெளிப்படுத்தப்பட்ட பரத்துக்குரிய ஞானத்தை அவர் ஒப்பிடுகிறார். இன்னொரு வார்த்தையில் சொன்னால், பரிபூரணத் தெய்வீகத்திட்டம் கிறிஸ்துவின் வருகை மற்றும் அவரது சிலுவை மரணம் ஆகியவை “உலகத் தோற்றத்துக்கு முன்னே தேவன் தமது மகிமைக்காக ஏற்படுத்தியவை,” அவை மறைக்கப்பட்டிருந்தது. ஆதி காலங்களில் வாழ்ந்த மக்கள் இந்த இரகசியத்தை தாங்களாக தங்கள் கண்களையோ காதுகளையோ பயன்படுத்திக் கண்டுபிடிக்க இயலவில்லை. அவர்களின் இருதயங்களிலோ மனதிலோ தோன்றாதபடியால், அவர்களால் முன்னறிவிக்கவும் முடியவில்லை. எப்படியாயினும் இப்பொழுது, அந்த மறைக்கப்பட்ட “இரகசியம்” தேவனுடைய ஆழங்களை அறிந்திருக்கிற ஆவியானவர் மூலமாய் ஜனங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது (2:10, 11).

*ஐந்தாவதாக, இந்த ஞானம் உலகத்தினாலல்ல, தேவ ஆவியினால் அருளப்பட்டு அறிந்து கொண்ட அப்போஸ்தலர்களால் பெற்று கொடுக்கப்பட்டது* (2:12, 13). பவுல் குறிப்பிடுகிற “நாங்கள்” எனும் பதம், “நாங்களோ, தேவனால் அருளப்பட்ட, ஆவியையே பெறுகிறோம்” என்று குறிப்பிட்டதன்மூலம் எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் என்று சுட்டிக்காட்டாமல், அப்போஸ்தலர்களுக்கும், ஏவப்பட்ட தனிமனிதர்களுக்கும் குறிப்பாய் பேசப்பட்டது.[12] இதிலே வலியுறுத்தப்படும் கருத்து என்னவெனில் தேவனிடத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டவை - ‘‘உலகத்தின் ஆவியினால் வரவில்லை” (2:12) தேவனிடத்திலிருந்து வந்த ஆவியினால் வெளிப்படுத்தப்பட்டது.

*ஆறாவதாக, அது ஜென்மசுபாவமுள்ள மனுஷனாலே பெற்றுக்கொடுக்கப்பட்ட ஞானமல்ல* (2:14-16). “ஜென்ம சுபாவமுள்ள மனுஷன்” (2:14) என்பதை “ஆவிக்குரியவன்” என்பதோடு வித்தியாசப்படுத்துகிறார் (2:15). பரிசுத்த ஆவியை பெற்ற அப்போஸ்தலர்களுடன் இந்த விளக்கம் சம்பந்தப்படுத்தப்பட வேண்டும் (2:12).

“ஜென்ம சுபாவமுள்ள மனுஷனோ” தேவனுடைய “ஆவிக்குரியவைகளை” ஏற்றுக் கொள்ளமாட்டான்; அவைகள் அவனுக்குப் “பைத்தியமாய்த் தோன்றும்” (2:14), என்று பவுல் சொன்னபோது, ஏற்கனவே சொன்னதையே ஏறத்தாழ மீண்டும் சொல்கிறார்: சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்கு பைத்தியமாயிருக்கிறது (1:18). உலக ஞானத்தை சார்ந்திருப்பவர்கள் பரிசுத்த ஆவியினிடத்திலிருந்து, கிறிஸ்துவும் அவர் சிலுவையிலறையப்பட்டதையும் குறித்த செய்தியை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.[13]

அதற்கு மாறாக, “ஆவிக்குரியவன்” - தேவன் தாமே தமது வசனங்களை அருளிச் செய்த பவுலையும் மற்றவர்களையும் அர்த்தப்படுத்துகிறது - அவர்கள்

கிறிஸ்துவின் சிந்தையைக் கொண்டிருந்ததால் கர்த்தருடைய சிந்தையை, அறிந்திருக்கிறார்கள் (2:16ஆ). ஆவியினால் ஏவப்பட்ட இந்த ஆவிக்குரியவர்கள், எல்லாவற்றையும் (ஆராய்ந்து) "நிதானிக்கக் கூடியவர்களாயிருக்கிறார்கள்."[14] அதாவது, எல்லா விஷயங்களையும் குறித்து தீர்ப்புச் செய்யவும், தேவனுடைய சிந்தையை நிதானிக்கவும், பொய்க்கும் உண்மைக்குமுள்ள வித்தியாசத்தை பகுத்துப் பார்க்கவும் திறமை பெற்றிருக்கிறார்கள். ஆவியில்லாதவர்கள் யாராலும் அவர்கள் "ஆராய்ந்து" அறியப்படவோ நியாயந்தீர்க்கப்படவோ முடியாது. "கிறிஸ்துவின் சிந்தையில்லாதவர்கள்" இவர்களுடைய வெளிப்பாட்டைக்குறித்து கேள்வி கேட்கவோ குற்றப்படுத்தவோ எந்த அதிகாரமும் கிடையாது.

## அன்றும் இன்றும் சபைக்கான பாடங்கள்

*இந்த வார்த்தைகளிலிருந்து கொரிந்து பட்டணத்துச்சபை கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது என்ன?* உலக ஞானத்தை அடிப்படையாகக்கொண்டு பிரசங்கியார்களை மதிப்பிடக்கூடாது என்பதையும் அவர்கள் பரத்திலிருந்து வருகிற ஞானத்தையே சார்ந்திருக்கவும் பவுல் விரும்பினார் - இதுவே அப்போஸ்தலர்களால் கொடுக்கப்பட்ட ஏவப்பட்ட செய்தி. இந்த செய்தி கொடுப்பவரின் சாதுரியத்தையோ ஞானத்தையோ அடிப்படையாக வைப்பதைக் காட்டிலும், பைத்தியமாகத்தோன்றினாலும் அந்தச் செய்தியின்மேல் தங்களின்முக்கியத்துவத்தை வைத்தால் வித்தியாசப்பட்ட பிரசங்கியார் மீது வைக்கும் பற்றுறுதியான அவர்களுடைய பிரச்சனை தீர்க்கப்படும், ஆகவே அவர்கள் ஐக்கியமாயிருக்கக்கூடும்.

*செய்திசார்ந்த வசனப்பகுதியை நாம் எப்படி நமக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்?* கொரிந்தியருக்கு எழுதப்பட்ட செய்தி இன்றைக்கு, விசேஷமாக ஒரு சபை போராட்டங்களைச் சந்திக்கும் போது, முக்கியதேவைப்படும் ஒன்று.

*சபையாராகிய,* நாம் 1 கொரிந்தியர் 1, 2-ன் பாடங்களை பிரச்சனைகளைத் தீர்ப்பது எப்படி என்று அறிந்து நமக்கு அதை நடைமுறைப்படுத்திக் கொள்ளலாம். சபை முன்னோடிகள் ஒரு சிக்கலான பிரச்சனைக்கு தீர்வு காண விழையும்போது, அவர்கள் உட்கார்ந்து, சூழ்நிலையைப் பற்றி விவாதித்து, தங்களுக்கு கிடைத்த ஒட்டுமொத்த ஞானத்தையும் பயன்படுத்தி என்ன செய்ய வேண்டும் என்ற முடிவை எடுக்கக்கூடும். பிரச்சனையை சரிசெய்ய என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்கு ஆலோசனை பெற பிரசித்தி பெற்ற ஆசிரியர்கள் எழுதின புத்தகங்களைக்கூட படிப்பார்கள்.

சபை முன்னோடிகள் ஒருவருக்கொருவர் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதும், அல்லது மற்ற மனிதர்கள் எழுதின புத்தகங்களைப் படித்து அதன் அறிவுரைகளை அப்படியே செயல்படுத்த முற்படுவது தங்கள் முன்னுரிமைகள் அல்ல என்பதை புரிந்துகொண்டு, தங்களுடைய சூழ்நிலைக்கு கர்த்தருடைய சித்தத்தைஅறிய வேத வசனத்தைதேட வேண்டிய அவசியத்தை புரிந்து கொள்ளுகிறவரைக்கும், மேற்குறித்த அணுகுமுறைகள் தவறானவைகள்அல்ல. நாம் எச்சரிக்கையாக இல்லாவிடில், தேவனுடைய பரலோக ஞானத்தைச் சார்ந்திராமல் மனித ஞானத்தையே சபைசார்ந்திருப்பதை காண்போம். தேவனுடைய வசனமாகிய திருமறையே சபைப்பிரச்சனைக்குத் தீர்வை கொடுக்கும் நிவாரணத்தைக் கொண்டுள்ள பிரதான புத்தகம்! சபை முன்னோடிகள் தேவனுடைய வசனங்களை குறிப்பிடாமல்

பிரச்சனையைத்தீர்க்க முடிந்தால்கூட, அவர்கள் செய்தது தேவனுடைய சித்தத்திற்கு முரணானவைகளாக இருந்தால் அவர்கள் சாதித்தது எதுவுமில்லை.

*தனிப்பட்டவர்களாகிய நாம் ஒவ்வொருவரும்*, கொரிந்து பட்டணத்துக்கு எழுதப்பட்ட வசனங்களை நமக்குப்பயன்படுத்தி நமது சுய சாதுரியத்தையோ, அறிவுக்கூர்மையையோ, அல்லது கல்வி அறிவையோ நம்பாமல், சிலுவையைக் குறித்துச் சொல்லப்படும் தேவனுடைய செய்தியை மட்டும் விசுவாசிக்கும்படி தீர்மானிப்போம் - அது பைத்தியமாய்த் தோன்றினாலும் கைக்கொள்வோம். இன்று தேவ ஞானத்தை பரிசுத்த ஆவியால் ஏவப்பட்ட மனுஷர்கள் எழுதின அவருடைய வசனங்களில் காணலாம். நாம் தேவனைப்பிரியப்படுத்தவும் நமது தனிப்பட்ட பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவும், தேவனுடைய வசனமாகிய திருமறையை படிக்கவும், கற்கவும், கீழ்ப்படியவும் வேண்டும்.

---

குறிப்புகள்

[1]ரோமர்களும் ஞானத்தை மதிப்பிட்டார்கள். ரோம உலகம் கிரேக்க கலாச்சாரத்தினாலே மேற்கொள்ளப்பட்டிருந்தது. பழைய ஏற்பாடு குறிப்பாக நீதி மொழிகள் புத்தகத்தில் ஞானத்தை புகழ்ந்திருந்தபடியால், சபையிலிருந்த யூதர்களும் ஞானத்தைகுறித்த உயர்வான மதிப்பீட்டைக் கொண்டிருந்தனர். [2]இரண்டுமுறை (2:7 மற்றும் 2:8ல்) "ஞானம்" பதம் எழுத்துக்கள் வலப்பக்கம்சாய்வு நிலையில் உள்ளதன் மூலம் அது மூலப்பிரதியில் இடம்பெறவில்லை என்பதை குறிப்பிடுகிறது. இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் விட்டுவிடுவோமானால், "ஞானம்" "ஞானி" எனும் பதம் முப்பது வசனங்களில் பதினெட்டு முறைகாணப்படுகிறது. [3]நேரடிப்பொருளில் இந்தப்பதம் "ஞானமானபேச்சு" என்றுபொருள்படுகிறது. (Alfred Marshall, trans., *The Interlinear NASB-NIV Parallel New Testament in Greek and English* [Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1993], 482). [4]ஏசாயா 29:14-ஐ பவுல் சுட்டிக்காட்டுகிறார். [5]பவுல் "தேவனுடைய பைத்தியம்" மற்றும் "தேவனுடைய பலவீனம்" என்று குறிப்பிடும்போது (1:25), அவர் நேர் எதிர் பொருளில் பேசுகிறார். தேவனுடைய வழிகளை இந்த உலகம் "பைத்தியமாகவும்" "பலவீனமுள்ளதாகவும்" பார்க்கலாம், இருந்தாலும் அவைகள் மிகப்பெரிய ஞானவான்களின் ஞானத்தைக்காட்டிலும் மிகப்பெரிய பலவான்களின்பலத்தைக் காட்டிலும் அதிக ஞானத்தையும் பலத்தையும் உடையது. [6]தேவன், தமது சித்தத்தை நிறைவேற்ற ஒருபோதும் மனிதனுடைய ஞானத்தைச் சார்ந்திருக்கவில்லை. சுகப்படுத்தவும் விடுதலையாக்கவும் தாம் ஒருவரே பொறுப்பு எனக் காட்டும்படி அடிக்கடி அவர் "பைத்தியமாய்த் தோன்றுபவைகளைத் தெரிந்துகொண்டார்." நாகமானை சுகப்படுத்த "பைத்தியமாய்த்" தோன்றும் முறையைக் கையாண்டார் (2 இராஜாக்கள் 5:1-14), எரிகோ பட்டணத்து மதிலை விழப் பண்ணவும் (யோசுவா 6:1-21) கொள்ளிவாய்ச் சர்ப்பத்தால் கடியுண்ட இஸ்ரவேலர்களைக் குணப்படுத்தவும் அப்படியே செய்தார் (எண்ணாகமம் 21:4-9). [7]இந்தப்பட்டியலில் "ஐசுவரியவான்கள்" எனும்பதம் விடப்பட்டிருப்பது ஆர்வத்தைத்தூண்டுகிறது. "உங்களில் ஐசுவரியவான்கள்" அநேகரில்லை என்று பவுல் சொல்லவில்லை. அந்த உள்ளூர் சபையில் பெரும்பாலானோர் ஐசுவரியவான்களாக இருக்கவில்லை என்று அறியும் போது (சிலர்ஏழைகளாக இருந்துள்ளனர் என்பதும் தெளிவு, 1 கொரிந்தியர் 11:21 ஐக் காண்க), ஒருவேளைபவுல் மேற்சொன்ன வாக்கியத்தை விட்டு விட்டபடியால் ஒருவேளை கொரிந்துபட்டணத்தார் அனைவரும் செல்வச்செழிப்புகளை அனுபவித்திருக்கலாம்.

அப்படியிருந்திருக்குமேயானால் அதுவே அவர்களை இறுமாப்படையச் செய்திருக்கும் ஒரு காரணியாக இருக்கலாம். [8]NASB மொழியாக்கத்தின்படி, "இல்லாதவைகள்" ஏற்கனவேகுறிப்பிட்ட மூன்று பிரிவுகளுக்கு எதிரான பதமாயிருந்து அவைகளை விளக்கிச்சொல்வதாகும்; "பைத்தியமாய்த் தோன்றுகிறவைகள்," "பலவீனமானவைகள்," "இழிவானவைகள்" ஆகியவைகள்தான் "இல்லாதவைகள்." [9]பவுல் எரேமியா 9:24-ஐ மேற்கோள்காட்டிப்பேசுகிறார். [10]கிறிஸ்துவையும் அவர் சிலுவையில்அறையப்பட்டதையும் பிரசங்கிப்பது என்பது, கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலைக் குறித்து பிரசங்கிப்பது (1 கொரிந்தியர் 15:1-5); கிறிஸ்துவின் மரணத்திற்கு தொடர்பாக ஜனங்கள் என்ன பொறுப்பேற்க வேண்டும் என்பதைச் சொல்லுவதும் அதற்குள்ளான காரியம்தான். கிறிஸ்துவைச் சம்பந்தப்படுத்திக் காட்டும் எந்தத் திருமறைத் தலைப்பும் - உதாரணமாக, சபை - எனும் தலைப்பு "கிறிஸ்துவையும் அவர் சிலுவையில் அறையப்பட்டதையும் பிரசங்கிக்க பொருத்தமானதாகும்."

[11]ஏசாயா 64:4-ன் மேற்கோள் குறிப்பு இது, ஆனாலும் மெக்கார்வே "இது வினைச் சொல்லுக்கான மேற்கோள் அல்ல விளக்கமளிக்கக் கூடிய மேற்கோள் எனகுறிப்பிட்டார்" (J. W. McGarvey and Philip Y. Pendleton, *Thessalonians, Corinthians, Galatians and Romans* [Cincinnati, Ohio: Standard Publishing Foundation, n.d], 60). [12]இந்தக்கோணம் W. Harold Mare, "1 Corinthians," in Frank E. Gaebelein, ed., *The Expositor's Bible Commentary,* vol. 10, *Romans-Galatians* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1976), 201. ஏவப்பட்ட அப்போஸ்தலர்கள் "பரிசுத்த ஆவி போதிக்கும் வார்த்தைகளைப்" பேசினார்கள் (2:12, 13), (பழைய ஏற்பாட்டு புதிய ஏற்பாட்டு) வசனங்கள் பேசப்பட்டு ஏவப்பட்டவைகள். அதாவது வார்த்தைகளால் - மனதில் தோன்றும் எண்ணங்களால் அல்ல - வசனங்கள் ஏவப்பட்டன. [13]இந்த வசனப்பகுதி "கிறிஸ்தவர்கள் அல்லாதோர்" பரிசுத்த ஆவியினால் "ஒளி பெறாதவரைக்கும்" சுவிசேஷச் செய்தியை புரிந்து கொள்ள இயலாது எனப் போதிப்பதாக சிலர் உறுதிபடுத்தி குழப்பத்தை ஏற்படுத்துகின்றனர். [14]2:14, 15ல், "ஆராய்ந்து பார்த்தல்" எனும் வினைச் சொல் மூன்று முறைக் காணப் படுகிறது, அனேகிரினோ எனும் பதத்திற்கு கிரினோ எனும் வார்த்தையிலிருந்து வருகிற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது; வழக்கமாக "தீர்ப்புச் செய்தல்" என்று இது மொழியாக்கம் செய்யப்படுகிறது. பிற மொழி பெயர்ப்புகளில், இந்த வசனப் பகுதி, சுவிசேஷம் பரிசுத்த ஆவியினால் அருளப்படாவிட்டால், கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களுக்கு புரிந்து கொள்ள முடியாது என்று இந்தப் பகுதியை தவறாக பயன்படுத்துகின்றனர். "பகுத்துப் பார்த்தல்," "நிதானத்தல்," "தீர்ப்புச்சொல்லல்," "நியாயந்தீர்த்தல்" என்றெல்லாம் கூறுகிறது. (கிங் ஜேம்ஸ் வெர்ஸன்; புதிய கிங் ஜேம்ஸ் வெர்ஸன்); "பகுத்தாய்வுசெய்யப்பட்டது," "ஆராய்தல்" அல்லது "கூர்ந்துஆராய்தல்" (புதிய திருப்புதல் ஸ்டாண்டர்ட் வெர்ஸன்); "பகுத்தாய்வு," "நியாயந்த்தீர்த்தல் மற்றும் நியாயத்தீர்ப்புக்குட்பட்ட" (W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., "Judge," in *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* [Nashville: Thomas Nelson Publishers, 1985], 336).